பக்கங்கள்:-16+09

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 22 | சனிக்கிழமை | 07.09.2024 | அதிர்வு 036

## இந்திய மீனவர்கள் 14 பேர் இன்று கைது

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 14 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### செய்வேன் எனச் சொல்லும் சஜித்தைவிட

# செய்து காட்டிய ரணிலே எம் நாட்டுக்குத் தேவை!

## ராமேஷ்வரன் எம்.பி. தெரிவிப்பு





செய்வேன் எனச் சொல்லும் சஜித் பிரேமதாஸவை விட செய்து காட்டிய ரணில் விக்கிரமசிங்கவே எமது நாட்டுக்குத் தேவை என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து பூண்டுலோயா ஹெரோவ் தோட்டப் பகுதியில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02

# ரணிலுக்கு ஆதரவாக யாழில் அமைச்சர்கள் தீவிர பிரச்சாரம்



(எஸ்.நிதர்ஷன்)

ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் அமைச்சர்கள் இன்று தீவிர பிரச்சாரத்தை ஆரம்பித்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நாடு 03





# ரணிலுக்கு ஆதரவாக வவுனியாவில் வீதியில் இறங்கிப் பிரச்சாரம் செய்யும் காதர் மஸ்தான்



(கே.வசந்தன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் வவுனியா நகரப் பகுதியில் பிரச்சாரப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயாதீன வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நாடு முழுவதும் இன்று காலை பிரச்சாரப் பணிகள் சம நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைவாக, வவுனியா நகரப் பகுதியில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் அவரது ஆதரவாளர்கள் நகரப் பகுதியில் காணப்படும் வர்த்தக நிலையங்களில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்,

"ரணில் விக்கிரமிசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்குவதற்கு எமது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதை அவதானிக்கின்றோம். அவர் அதிகப் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார். அதற்கான சந்தர்ப்பமே இருக்கின்றது. வீழ்ச்சியடைந்த நாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அவர் மிக விரைவாக எமது நாட்டை மீட்டிருந்தார்." – என்றார்.





## செய்து காட்டிய ரணிலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இ.தொ.கா. பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராமேஷ்வரனின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் எஸ்.செல்லமுத்து, பிரதி தேசிய அமைப்பாளர் சசிகுமார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான பாரதிதாசன், ரஜினிகாந்த், சிவகொழுந்து, செல்வமதன், ரஜீவ்காந்தி, கிளோரியா உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மருதபாண்டி ராமேஷ்வரன் எம்.பி. உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:–

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலப்பகுதியிலேயே பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. பிரதேச சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. இவ்வாறு எமது மக்களுக்காகப் பல சேவைகளை செய்துள்ள ஜனாதிபதி காணி உரிமை வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் மேற்கொண்டுள்ளார். எனவே, ரணில் விக்கிரமசிங்க எதையும் செய்யமாட்டார் என எதிரணிகளால் முன்னெடுக்கப்படும் பிரசாரம் போலி என்பது இதன்மூலம் உறுதியாகின்றது.

ஆறு பேர் அல்ல இரண்டு பேர் இருந்தால்கூட மக்கள் ஆதரவுடன் பேரம் பேசி உரிமைகளையும், அபிவிருத்திகளையும் வென்றெடுக்கும் வல்லமை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு உள்ளது. அன்று முதல் இன்றுவரை இதனை நாம் நிரூபித்து வருகின்றோம்.

தனது தந்தை குடியுரிமை, வாக்குரிமை வழங்கினார் எனக் கூறிக்கொண்டு ஒருவர் வலம் வருகின்றார். எமது பெருந்தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் அன்று முன்னெடுக்கப்பட்ட அஹிம்சைவழி போராட்டத்தின் பிரதிபலனாகவே இந்த உரிமைகள் கிடைக்கப்பெற்றன. மாறாக எவரும் தங்கதட்டில் வைத்து இவற்றை தரவில்லை. அவரின் தந்தையைக்கூட எமது பெருந்தலைவரே காப்பாற்றினார் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதுமட்டுமல்ல பிரஜாவுரிமை பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலப்பகுதியிலேயே முழுமையாக முற்றுப்புள்ளி வைத்தார் என்பதையும் நாம் நன்றியுடன் நினைவுகூர வேண்டும். எனவே, மலையக மக்கள் தொடர்பில் அக்கறை செலுத்தக்கூடிய அதேபோல செய்யக்கூடிய வகையிலான உறுதிமொழிகளை வழங்கியுள்ள தலைவரை ஆதரிக்க வேண்டியது எமது பொறுப்பாகும். செப்டெம்பர் 21 ஆம் திகதி மக்கள் அவருக்கு வாக்களிக்க வேண்டும்.

பரிசித்து பார்ப்பதற்கு இது பிரதேச சபைத் தேர்தல் அல்ல, நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கப் போகின்ற ஜனாதிபதி தேர்தலாகும். எனவே, உலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த அனுபவமுள்ள ஒரு தலைவரின் பின்னால் அணி திரள்வோம். அப்போதுதான் நாடும், நாமும் மேம்பட முடியும்." – என்றார்.

# இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்பரப்புக்குள் மூன்று படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களே இன்று மாலை கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களும் மீன்பிடிக்குப் பயன்படுத்திய 3 படகுகளுடன் காங்கேசன் துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

அவர்கள், யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் நாளை ஒப்படைக்கப் பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத் தப்படவுள்ளனர்.

# ரணிலுக்கு அதரவாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழுவதும் இன்று காலை பிரச்சாரப் பணிகள் சம நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைவாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட குழுவினர் இன்று காலை யாழ். நகரில் பிரச்சார நடவடிக் கையை மேற்கொண்டனர்.

இதேவேளை, நல்லூர் சங்கிலியன் தோப்பு மற்றும் உடுப்பட்டி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள பிரச்சாரக் கூட்டங்களில் பங்கேற்பதற் காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று மாலையாழ்ப் பாணத்துக்கு வருகை தருகின்றமை குறிப்பிடத்தக்கது.















## தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன்

# வவுனியாவில் அநுரவை ஆதரித்து தீவிர பிரச்சார நடவடிக்கை ஆரம்பம்

(கே.வசந்தன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அநுரகுமார திஸாநாயக்கவை ஆதரித்து வவுனியா நகரில் தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியா, குடியிருப்பு பகுதியில் இன்று சனிக்கிழமை காலை ஆரம்பமாகிய பிரச்சார நடவடிக்கை நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முண்ணினியினர், ஆதரவு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.





# முல்லைத்தீவில் சங்குச் சின்னத்துக்கு வாக்களித்த வாக்குச்சீட்டைப் படம் எடுத்த ஆசிரியர் இன்று கைது

(ந.லோகதயாளன்)

வாக்குச்சீட்டில் புள்ளடியிட்ட பின்பு ஒளிப்படம் எடுத்த ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவில் இன்று கைது செய்யப்பட்டார்.

தபால் மூல வாக்களிப்பின்போது நேற்று புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் வாக்குச்சீட்டைப் புள்ளடியிட்ட பின்னர் கைத்தொலைபேசி மூலம் படம் எடுத்துள்ளார். இதனை உடனடியாகவே தேர்தல் கடமையில இருந்த அதகாரிகள் கண்டுகொண்டதால் மேற்படி ஆசிரியர் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதையடுத்து அந்த ஆசிரியர் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு என்பவற்றின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தேர்தல்கள் செயலகம், முல்லைத்தீவு பொலிஸார் ஆகியோர் இணைந்து இன்று மேற்கொண்ட விசாரணையில் மேற்படி ஆசிரியர் சங்குச் சின்னத்துக்கு வாக்களித்த வாக்குச்சீட்டைப் படம் எடுத்தமை கண்டுகொள்ளப்பட்டது. இதையடுத்து அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார்.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆக்கிரமிப்பு அரசியல்

இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் 37 வருடங்களுக்கு மேல் ஆக்கிரமித்து வைத்திருந்த தோட்டக் கம்பெனி ஒன்றினது வீடு ஒன்றை இப்போது நீதிமன்றம் தலையிட்டுப் பிடுங்கிக் கம்பெனிக்கு மீளக் கையளிக்கும் உத்தரவை வழங்கி இருக்கின்றது. அதன்படி வீடு கம்பெனியிடம் நீதித்துறையால் வழங்கப்பட்டு விட்டது.

சம்பந்தப்பட்ட தோட்டத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய போது அந்தப் பதவியின் பெயரில் தோட்ட நிர்வாகம் வழங்கிய வீட்டையே 1987 க்கு முன்னர் அந்த நிறுவனப் பணியில் இருந்து விலகிய பின்னரும் நிறுவனத்திற்கு கையளிக்காமல் ஆக்கிரமித்து வைத்திருந்திருக்கின்றார் அரவிந்த குமார். 1987 இல் தொடுக்கப்பட்ட வழக்குக்கு இப்போது 37 ஆண்டுகள் கழித்து முடிவு சொல்லி இருக்கின்றது இலங்கையில் நீதித்துறை.

நமது நீதித்துறையின் இந்த தாமத சீத்துவத்தை - சிவில் வழக்குகளின் இழுபறி நிலையை - வசமாக பயன்படுத்திக் கொண்டு, அரசியல் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகள் ஆட்டம் போடுவது இலங்கையின் பரவணிப் பழக்கமாகி விட்டது. அதற்கு அமைச்சர் அரவிந்த குமார் ஓர் உதாரணம் மட்டுமே.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் கொழும்பு மாதிவெல குடியிருப்புத் தொகுதியில் இப்படி நூற்றுக்கும் அதிகமான வீடுகள் அவற்றைத் தொடர்ந்து வைத்திருக்கும் உரிமையற்ற அரசியல்வாதிகளினால் இப்போதும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது.

ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் சமயத்தில் சொற்ப வாடகையில் கொழும்பில் வசிப்பதற்காக வசதியான இந்த வீடுகள் வழங்கப்படுகின்றன. தமது எம்.பி. பதவியை இழந்த பின்னரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவற்றை அரசிடம் மீள ஒப்படைக்காமல், அவற்றை ஆக்கிரமித்து, உரிமை கொண்டாடி, தொடர்ந்தும் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். இத்தகைய பல வீடுகள் சம்பந்தப்பட்ட எம்பிக்களினால் பிறருக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட நிலையில் அந்த எம்.பி. பதவியை இழந்த பின்னரும் வாடகைக் குத்தகை தொடர்வதாகக் கூறப்படுகின்றது.

ஆக, எம்.பியாக இருப்பவருக்கு அந்தப் பதவிக் காலத்தில் பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் வீடுகளில் நூற்றுக்கும் அதிகமானவை சட்ட விரோத ஆக்கிரமிப்பில் தொடர்கின்றன என்பதுதான் இவ்விடயத்தில் அவல நிலைமையாகும்.


அவர்களை வெளியேற்றி, மீண்டும் அந்த வீடுகளின் கட்டுப்பாட்டை பொறுப்பேற்பதற்காக அரச அதிகாரிகள் சிவில் வழக்குகளுக்குப் போனால் அரவிந்தகுமாரின் தற்போதைய வழக்கு போல அவையும் 35 வருடங்கள் தாண்டியும் இழுபடலாம் என்று அவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மேற்படி மாதிவெலவில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீட்டுத் தொகுதி தொடர்பில் நடத்திய பூர்வாங்க விசாரணைகளில் இப்படி 120 வீடுகள் சட்டரீதியாகப் பயன்படுத்த உரிமையற்ற ஆக்கிரமிப்பாளர்களின் ஆதிக்கத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கூட தமிழர் உரிமைகள் குறித்தும், தேசியம் குறித்தும் அதிகம் பேசும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சமூகத் தொண்டு நிறுவனம் ஒன்றுக்குரிய காணியையும் வீட்டையும் நகரின் மத்தியில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேல் ஆக்கிரமித்து வைத்து அடாவடித்தனம் பண்ணும் அட்டகாசம் தொடர்வது மறைக்கக் கூடியதல்ல.

அரசியல்வாதிகளின் இத்தகைய அடாவடித்தனங்கள் விடயத்தில் சட்டம், நீதி, ஒழுங்கு மிக இறுக்கமாக செயற்பட வேண்டும். அத்தகையோரின் அராஜகங்கள் ஒட்ட நசுக்கப்பட வேண்டும்.

# தையிட்டி விகாரைப் பகுதி இரகசியமாக அளவீடு!




**(ந.லோகதயாளன்)**

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக் கைகள் மும்முரமாக இடம்பெறும் அதேநேரம், யாழ்ப்பாணம் – தையிட்டி விகாரை அமைந்துள்ள பகுதியை முழுமையாக சுவீகரிக்கும் நோக்கில் இரகசியமான முறையில் நில அள வீடு மேற்கொண்டு வரைபடமும் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தையிட்டிக் கிராமத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அண்டிய நிலம் முழுவதையும் சுவீகரிக்க முயற்சிக்கப்பட்டு வருகின்றது. இந்த நில அபகரிப்பின் முதல் அங்கமாக அந்தப் பகுதியை அளவீடு செய்ய நில அளவைத் திணைக்களம் முயன்ற போதெல்லாம் அந்த நிலத்தின் உரிமையாளர்களும் அரசியல்வாதிகளும் எதிர்ப் புத் தெரிவித்து வந்தனர்.

இந்த எதிர்ப்பின் காரணமாக மாவட்ட நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அளவீட்டை மேற்கொள்ளாது திரும்பிச் சென்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

இவற்றின் அடிப்படையில் தற்போது விகாரை அமைந் துள்ள பிரதேசம் மற்றும் விகாரையைச் சூழவுள்ள பகுதி யென 6 ஏக்கர் நிலம் நில அளவைத் திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகள் கொழும்பில் இருந்து வருகை தந்து அளவீட்டை மேற்கொண்டு அதன் வரை படத்தைத் தெல்லிப்பழை பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளனர்.

இவற்றின் அடப்படையில் 6 ஏக்கர் நிலம் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதி நிலங்களின் உரிமையாளர்களை அடையாளம் காண முடிய வில்லை எனவும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி வேட்பாளர் ரணிலை ஆதரித்துப் பிரச்சாரம் ஆரம்பம்!





**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து சம்மாந் துறை நகரில் பிரச்சார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டன.

ஓய்வு பெற்ற பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தலைமையில் குஇந்த நடவடிக்கை இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

இதன்போது சம்மாந்துறை தினச்சந்தை, நகர வர்த்தக நிலையங்களுக்கு சென்ற ஓய்வு பெற்ற பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ் அப்துல் மஜீட் , ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆதரவு வழங்குமாறு வர்த்தகர்களிடம் வேண்டு கோள் விடுத்தார்.

இதேவேளை, குறித்த நடவடிக்கை நாடளாவிய ரீதியில் இன்றைய தினம் காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.








# முன்மாதிரியான மாணவர்களுக்கு திறமைக்கான சான்றிதழ் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் பல்துறை ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்கும் நோக்கில் திறமைக்கான சான்றிதழ் வழங்கும் செயற்பாடு இடம்பெற்றது.

அந்த வகையில் திறமைக்காக சான்றிதழை பெற்ற மாணவர்கள் குறித்த தவணையில் 90 வீத வரவையும், பரீட்சையில் சராசரி 80 இற்கும் அதிகமான புள்ளிகளையும், அனைத்து பாடங்களிலும் 75 புள்ளிகளையும், ஆகக்குறைந்தது ஒரு விளையாட்டு செயற்பாட்டிலாவது ஈடுபட்டிருந்தமை, ஆகக்குறைந்தது ஒரு கழகத்திலாவது அங்கத்தவராக இருந்தமை, எந்த விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்படாதவராக இருந்திருத்தல் என்பன கணிப்பிடப்பட்டன.

இந்த நிகழ்வின் நோக்கம் ஆளுமையுள்ள சிறந்த பிரஜைகளை பாடசாலைகளில் உருவாக்குவதாகும். இந்தச் செயற்பாடானது மாணவர்களை ஊக்கப்படுத்தும். எனவே இதனூடாக பாடசாலையில் பல்வேறு விருப்பத்துக்கு உரிய மாற்றங்களை அடைய முடியும் என அதிபர் தெரிவித்தார்.

மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்த கௌரவிக்கும் நிகழ்வில் மாணவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# பாலையடி வாலவிக்னேஸ்வரன் சித்திரத்தேர் வெள்ளோட்டம் நேற்று!





(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலயத்தின் முதலாவது சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆலயத்தில் நடைபெற்றது.

39 லட்சம் ரூபா செலவில் 21 அடி உயரத்தில் இந்தச் சித்திரத் தேர் ஆலயத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்தின் முன்னாள் பிரதம குருவான யாழ்ப்பாணம், இருபாலை, கற்பகப்பிள்ளையார் ஆலய ஆதீனகர்த்தா அமரர் சிவஸ்ரீ இரத்தினசபாபதி சண்முகரெத்தினம் குருக்கள் வடிவாம்பிகை குடும்பம் சார்பாக இந்த அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சித்திரத்தேரை யாழ்ப்பாணம் கைதடி தச்சன் தோப்பைச் சேர்ந்த சிற்பாச்சாரி சுப்பிரமணியம் அஜந்தன் குழுவினர் வடிவமைத்தனர். அவருக்கு சிற்பக்கலையரசன் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். குருக்கள் குடும்பத்தினர் மற்றும் ஆலய பரிபாலன சபையினர் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கம் வழங்கினர்.



# சஜித்தின் வெற்றியை உறுதிப்படுத்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் களத்தில் !

(நூருல் ஹுதா உமர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை வெல்ல வைக்கும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான செயற்பாடுகளை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுத்துள்ளார்.

இதற்கு உருவாக்கப்பட்ட குழுவின் கூட்டம் நேற்று கட்சியின் தவிசாளரும், வடகிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான ஏ.எல். அப்துல் மஜீத் தலைமையில் சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

ஏழு உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவில் கல்முனை தேர்தல் தொகுதிக்கான ஜனாதிபதி தேர்தல் பணியை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பொத்துவில் தேர்தல் தொகுதிக்கான ஜனாதிபதி தேர்தல் பணியை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், சம்மாந்துறை தொகுதிக்கான ஜனாதிபதி தேர்தல் பணியை முன்னெடுப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ. மன்சூர் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான றஹ்மத் மன்சூர், முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ காதர், முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் மேயருமான கலாநிதி சிராஸ் மீராசாகிப், முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் மற்றும் சமய விவகார இணைப்பாளர் என்.ரீ.சப்றாஸ், முஸ்லிம் காங்கிரஸின் உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளருமான ஏ.சீ. சமால்டீன் ஆகியோர் அடங்கியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் அலுவலகங்களைத் திறத்தல், அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள், வட்டார ரீதியான பிரச்சாரக் கூட்டங்கள், வட்டார ரீதியாக வீடு வீடாகச் சென்று பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீர்மானங்கள் இதன்போது மேற்கொள்ளப்பட்டன.

மீண்டும் அடுத்த மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மருதையடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் தீர்த்தத் திருவிழா இன்று





(வடிவேல் டினேஸ்)

கிழக்கிலங்கையில் பக்தருக்குக் கண் மாணிக்கம் வழங்கிய வரலாற்றைக் கொண்ட அக்கரைப்பற்று ஸ்ரீமருதையடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தோற்சவ நிகழ்வானது இன்று இடம் பெற்றது.

விநாயகர் சதுர்த்தி நாளாகிய இன்று தீர்த்தோற்சவம் இடம் பெற்றது ஆலயத்தின் சிறப்பை மேலும் எடுத்தியம்புகின்றது.

கடந்த மாதம் 29 கொடியேற்றம் இடம் பெற்று தொடர்ந்து 11 நாள்கள் பூசைகள் மற்றும் யாகம் என்பன இடம் பெற்றன.

இதனை தொடர்ந்து இன்று தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. இன்று மாலை இடம் பெறும் கொடியிறக்க நிகழ்வைத் தொடர்ந்து நாளை இடம் பெறும் வைரவர் பூசையுடன் இந்த வருட உற்சவம் நிறைவு பெறும்.







# மன்னாரில் அரச மருந்து கூட்டுத்தாபனம் அமைப்பதற்கு முதற்கட்ட நடவடிக்கைகள்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தின் மன்னார் மாவட்டத்துக்கான கிளையை ஸ்தாபிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமை (6) முன்னெடுக்கப் பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் மருந்தகங்க ளில் மருந்துகள் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் மக்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மல நாதனின் கோரிக்கைக்கு அமைவாக அரச மருந்து கூட்டுதாபனத்தின் கிளையை மன்னாரில் ஆரம்பிப்பதற் கான இடம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் பொது மக்கள் மிகக் குறைந்த விலையில் மருந்துகளை பெற்று கொள்ளும் வகையில் மாவட்ட செயலக வளாகத்தில் இந்தக் கிளை ஆரம்பிக் கப்படவுள்ளது.

அடையாளப்படுத்தப்பட்ட காணியை அளவிடும் முகமாக 'ஒசுசல' அதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரதேச செயலா ளர் எம்.பிரதீப், மன்னார் வைத்தியசாலை பணிப்பாளர் அசாத் எம்.ஹனிபா, மன்னார் நகர சபை செயலாளர் எக்ஸ்.எல்.பிரிட்டோ உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்ட னர்.

# குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

வடமராட்சி, அல்வாய் வடக்கு அருள்மிகு குருக்கட்டு அரசடி விநாயகர் ஆலய ஜீனோர்த்தாரண அஷ்டபந்தன நவகுண்ட பட்சஷ சப்தயாக மஹா கும்பாபிஷேகம் நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிமுதல் 8.15 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள் ளது.

இதற்கான கர்மாராம்பம் கடந்த 4 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகியது. இன்று 7 ஆம் திகதி சனிக்கிழமை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெற்றது.

வவுனியா கோவில்குளம் சிவன்கோவில் பிரதமகுரு வேதத் தமிழ்ச் சுடர் சிவஸ்ரீ நாராயணசண்முகநாத குருக்கள் பிர திஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். மூலமூர்த்தி விநாயகப் பெருமானுக்கும் தொடர்ந்து பரிபாலன மூர்த்திகள் மற்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரம், இராஜகோபுரம் ஆகியவற்றுக்கும் கும்பாபி ஷேகம் நடைபெறும்.







### ஐந்து அம்சக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதால்

# புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி ரணிலுக்கு ஆதரவு வழங்குவதற்குத் தீர்மானம்!

### கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவிப்பு



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்வைக்கப்பட்ட ஐந்து அம்ச கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவற்றை செயற்படுத்தி தருவார் என்று வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பதற்கு தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர் என்று புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சியின் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தை நேற்று (6) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்துக்குப் பின்னர் சுமார் 12,000 முன்னாள் போராளிகள் வடக்கு, கிழக்கில் வாழ்கின்றனர். தமிழ் அரசியல் தலைவர்களோ புலம்பெயர் அமைப்புக்கள் இதுவரை அவர்களுக்கு முழுமையான வாழ்வாதார உதவிகளை வழங்கவில்லை. அதன் அடிப்படையில் முன்னாள் போராளிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குதல், அதே நேரம் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் கைது செய்யப்படக்கூடாது, அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், இந்த நாட்டில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான சுகந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டும் போன்ற கோரிக்கைகளின் அடிப்படையில் அவற்றை நிறைவேற்றுவார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

இதன் அடிப்படையிலே புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கிறது.- என்றார்.

# தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம்!

### மட்டக்களப்பு - செங்கலடியில் நேற்று





(பழுவூரான்)

மட்டக்களப்பு - செங்கலடியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

செங்கலடி சீனிப்போடியார் மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், தேசிய மக்கள் சக்தியின் - தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி, மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் உரையாற்றிய சுனில் ஹந்துன்னெத்தி,

இது ஆட்சியாளர்களுக்கான தேர்தல் அல்ல. மக்களுக்கான தேர்தல். கடந்த ஆண்டு மக்கள் தேர்தலை எதிர்பார்த்தனர், மக்களின் எதிர்பார்ப்பை வீணடித்து ரணிலை ஜனாதிபதியாக்கினர்.

ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை வைத்துக் கொண்டு ஜனாதிபதி ஆகினார் என்றால் அது ரணில் விக்ரமசிங்கதான். மக்களின் ஆணை அதுவல்ல. ரணில் விக்கிரமசிங்க பிரதேச சபை தேர்தலிலும் தோற்றார். அப்போது அவர் தேர்தல் நடத்த பணம் இல்லை எனத் தெரிவித்தார். இந்த நிலையில் இந்தச் செயற்பாடு சட்டத்துக்கு முரணானது என உயர் நீதிமன்றம் தெரிவித்தது.

தற்போதைய தேர்தல் மக்களுக்கு வாய்ப்பளிக்கின்ற ஒரு தேர்தலாக மாறியுள்ளது. மக்கள் அநுரவுக்கு வாக்களிக்க வேண்டும்.- என்றார்.



# கல்முனைக்கு நேற்று விஜயம் செய்திருந்த ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக் குழு!

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்பு குழு நாடளவிய ரீதியில் விஜயம் செய்து தேர்தல் முகவர்களை சந்தித்து வருகிறது.

அந்த வகையில் நேற்றுவெள்ளிக்கிழமை கல்முனைக்கு விஜயம் செய்தது.

அங்கு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் இணைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான மு. ராஜேஸ்வரனின் தேர்தல் அலுவலகத்துக்க விஜயம் செய்தார்கள். அங்கு அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவர் நானாட்டானில் கைதாகினர்!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், முருங்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நானாட்டான் பிரதேசத்தில் மதுபானம் அருந்திய நிலையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பேர் முருங்கன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் நானாட்டான் சுற்றுவட்டச் சந்தியில் இடம் பெற்றது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரவர் அரிப்பு துறையை சேர்ந்தவர் என்றும் மற்றவர் நானாட்டான் பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும்நீதிமன்றத்தில்முன்னிலைப் படுத்த முருங்கன் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# மட்டக்களப்பில் சுமூகமாக நடந்த தபால் மூலமான வாக்குப் பதிவு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் உள்ளிட்ட அரச திணைக்களங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு சுமூகமான முறையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாநகர சபையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில் உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.பி.எம்.சுபியான் மேற்பார்வையின் கீழ் தபால் மூல வாக்களிப்பானது மட்டக்களப்பு மாநகர சபையில் நடைபெற்றது.





கலாபூஷணம் பரீட் இக்பால்,
யாழ்ப்பாணம்.

(சர்வதேச குடியிருப்பு தினம் இன்றாகும்)

# சுற்றாடலை பேணுவதற்கு தரமான குடியிருப்புக்கள் அவசியம் தேவை...!

உலகின் ஆரம்ப காலத்தில் உருவான குடியிருப்புக்கள் நதிக் கரைகளில்தான் தோற்றுவிக்கப்பட்டன. அங்கேதான் உலக நாகரிகங்களும் தோற்றுவிக்கப்பட்டன என்று வரலாறு கூறுகின்றது. குடியிருப்பானது மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமானது. குடியிருப்பு என்பது வீடு, சுகாதார வசதி, குடி தண்ணீர் வசதி, நல்ல சுற்றாடல், வீதிப் போக்கு வரத்து, தொலைத் தொடர்பு, சமூக கட்டமைப்பு ஆகிய அனைத்தையும் கொண்டதே ஆகும். இதற்கு அமைவாகவே குடிருப்புக்களும் நகரங்களும் அமைய வேண்டுமென்பது ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சியமாகும்.

இந்த இலட்சியத்தைக் கொண்டு மனிதக் குடியிருப்பு குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் முதல் மாநாடு கனடாவின் வான் கூவரில் 1976 இல் நடைபெற்றது. ஐ.நா. பொதுச்சபையின் சிபாரிசின் பெயரில் 1985 இல் ஒவ்வொரு வருடமும் உலக குடியிருப்பு தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கமைய முதலாவது உலகக் குடியிருப்பு தினம் 1986 தொடக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

சர்வதேச குடியிருப்பு தினம் இந்த வருடம் (2024) செப்ரெம்பர் மாதம் 07 ஆம் திகதி இன்று “சிறந்த நகர்ப்புற எதிர் காலத்தை உருவாக்க இளைஞர்களை ஈடுபடுத்துதல்” எனும் தொனிப்பொருளுக்கமைய அனுஷ்டிக்கப்படுறது.

உலகில் வாழும் அனைவரும் குடியிருப்பு வசதிகளை கொண்டிருக்க வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சியம். ஆனால் இன்று உலகில் வாழும் மக்களின் தொகை 817 கோடியையும் தாண்டி விட்டது. 200 கோடி மக்கள் வீடற்றோர்களாக இருக்கின்றனர். இவர்கள் சுத்தமான குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி ஆகியன இன்றி வாழ்கின்றனர். நகரங்களிலும் 40 சதவீதத்தினர் சுத்தமான நீர், பொது வசதிகள் என்பன கிடைப்பதில்லை. இன்று உலக சனத்தொகையில் 55 சதவீதத்தினர் நகரங்களிலேயே வாழ்கின்றனர். 2025 இல் மூன்றில் இரண்டு பங்கினர் நகரங்களில் தான் வாழ்வார்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

தற்போது உலகில் நகர்ப்புறங்களில் சனத்தொகையில் அரைவாசிப் பேர் திட்டமிடப்படாத ஆக்கிரமிக்கப்பட்ட குடியேற்றங்களில் தங்கி வாழ்கின்றனர். எனவே தொற்று நோய்களை கொண்ட சுற்றாடலில் அமைந்த தரக்குறைவான வீடமைப்பு திட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

உலக சனத்தொகையானது கி.பி. 01 இல் 2 கோடியாகக் காணப்பட்டது. இன்று 817 கோடி ஆகும். சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்கக் குடியிருப்பு வசதிகளில் தரக்குறைவு ஏற்படும். இதனால் தொற்று நோய்கள், புதிய நோய்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உண்டு.

சனத்தொகை அதிகரிக்கும் போது குடியிருப்பு தரக்குறைவாக இருக்கும் நிலையில் பெண்களின் சீரழிவு, சிறுவர் துஷ்பிரயோகம், வறுமை, வேலையின்மை காணப்படும். இவற்றைத் தவிர்க்கும் முகமாக உலகில் வாழும் அனைவருக்கும் தரமான குடியிருப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் இலட்சியமாகும்.

மூன்றாம் உலக நாடுகளின் சனத்தொகையானது விரைவாக அதிகரித்துச் செல்லும் அளவுக்கு குடியிருப்பு வசதிகள் பெருகவில்லை. சுகாதார வசதிகளும் குடி தண்ணீர் வசதிகளும் போதியதாக இல்லை. உலகெங்கும் நகரமயமாக்கல் மிகவும் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக நன்கு திட்டமிட்டு செயலாற்ற வேண்டும் என்பதிலும் ஐக்கிய நாடுகள் சபையினர் அக்கறை கொண்டுள்ளனர்.

நகரங்களை மக்கள் அதிகளவில் நாடுவதால், நகரங்களில் மக்கள் வாழ்வதற்குப் பற்றாக்குறை ஏற்படும் போது புதிய நகரங்களை உருவாக்குகிறார்கள். இதனால் சுற்றாடல் பாதிக்கப்படுகின்றது.

திட்டமிடப்படாத குடியிருப்புக்கள் காரணமாக உலகின் வனம் முற்றாக அழிந்துவிடும் ஆபத்துள்ளது. உலகின் வெப்ப வலயக் காடுகள் ஒரு மணித்தியாலத்துக்குச் சராசரியாக 60,000 ஏக்கர் என்ற வீதத்தில் அழிந்த வண்ணம் இருக்கின்றன. இலங்கைக் காடுகளில் இன்று எஞ்சியுள்ளது 25 சத வீதம் மட்டுமே. மனித அபிவிருத்திக்காகவும் அடுத்த சந்ததிக் காகவும் இயற்கை வளங்களை திட்டமிட்டு பேண வேண்டிய அவசியத்தை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

குடியிருப்புக்களை ஏற்படுத்துதல் என்பது சில நிபுணர்கள் மாத்திரம் நட்சத்திர ஹோட்டலில் கருத்தரங்குகளை நடத்தி விவாதிக்கும் ஒரு விவகாரம் என்று இன்றும் கூட பலர் நினைக்கிறார்களோ என்று வியக்க வேண்டியிருக்கிறது. புதிய குடியிருப்பு பணிகள் காரணமாக அண்மைய சில ஆண்டுகளாக பிறந்த புதிய குடியிருப்புக்கள் பற்றி மக்கள் மத்தியில் ஓரளவுக்கு உணர்வு காணப்படுகின்ற போதிலும், அரசியல் தலைமைத்துவங்கள் இது விடயத்தில் போதியளவு அக்கறை காண்பிக்காததால் கணிசமான முன்னேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை.

புதிய குடியிருப்புக்களை உருவாக்குவதற்காக மரங்கள் வெட்டப்படுகின்றன. மரங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான உறவு மிகவும் முக்கியமானதாகும். மனிதனின் இருப்புக்கு மரங்கள் அத்தியாவசியம் என்பதைப் பலரும் உணருவதில்லை. மரங்கள் இல்லையெனில் நாம் இறந்துவிடுவோம். இதனாலேயே சுற்றுச் சூழலியலாளர்கள் மரங்கள் தறித்து வீழ்த்தப்படுவதற்கு எதிராகப் பெரும் இயக்கங்களை முன்னெடுத்து வந்திருக்கிறார்கள்.

மனிதர்களினால் செய்யப்படக் கூடிய மிகவும் மூர்க்கத்தனமான செயல்களில் ஒன்று மரங்களையும் காடுகளையும் அழித்து அதன் மூலம் பூமியை ஒரு பாலைவனம் ஆக்குவதுதான். பாதுகாக்கப்பட்ட சில பகுதிகளையும் எட்டுவதற்கு கடினமான இடங்களையும் விட்டால் இந்த வனப்புமிகு முதுசத்தின் பெரும் பகுதி இப்போது இழக்கப்பட்டுவிட்டது. எஞ்சியுள்ள காடுகளும் மிகவும் மோசமாகச் சீரழிக்கப்பட்டு வருகின்றன.

மனித அபிவிருத்திக்காகவும் அடுத்த சந்ததிக்காகவும் இயற்கை வளங்களை மனிதன் திட்டமிட்டுப் பேண வேண்டிய பொறுப்புடையவன். உலகில் மனித குடியிருப்பை மனித வாழ்க்கைக்கு உகந்ததாக அமைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதுடன் மக்களிடமும் தரமான குடியிருப்பு பற்றிய உணர்வு இருக்க வேண்டும். மக்களும் அரசுடன் ஒத்துழைப்பதன் மூலமே தரமான குடியிருப்புக்களை உருவாக்க முடியும். உலகில் வாழும் மக்களில் 200 கோடி பேர் தரமான குடியிருப்புக்கள் அற்றோர்களாக இருக்கின்றனர். உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் தரமான குடியிருப்புக்களை ஏற்படுத்த அரசும் ஐக்கிய நாடுகள் சபையும் உழைக்க வேண்டும். மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.



# ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான தூதுவர் குழுவுடன் குகதாசன் எம்.பி.!

(ஹஸ்பர்)

இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் தலைமையிலான குழு தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டப் பணிமனைக்கு நேற்று (06) மாலை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் எதிர்கொள்ளும் நிலச் சிக்கல் உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் பற்றியும், அதற்கான தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.






# கேர்க்கசோல்ட் தோட்டத்தில் 7 பேரைக் கொட்டிய குளவிகள்!

(மஸ்கெலியா நிருபர்)

குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் ஏழு பேர் பொகவந்தலாவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

பொகவந்தலாவ கேர்க்கசோல்ட் தோட்டத்தில் பணியில் ஈடுபட்டு வந்த வேளை, தேயிலை செடியின் வேர் பகுதியில் கட்டப்பட்டு இருந்த குளவி கூடு கலைந்து கொட்டியதால் இந்த அனர்த்தம் நிகழ்ந்ததுள்ளது.

மலையகப் பகுதிகளில் தொடரும் குளவி கொட்டால் நாளாந்தம் பெருந்தோட்ட தொழிலாளர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்காகும் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் எவ்விதமான கொடுப்பனவுகள் வழங்குவது இல்லை என்று பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தெரிவித்தனர்.





# யானை தாக்கியதில் யாசகர் பலி!

(வி.ரி. சகாதேவராஜா)

யானை தாக்கியதில்  யாசகர் ஒருவர் பரிதாபகரமாக பலியானார்.

இந்தச் சம்பவம் இன்று சனிக்கிழமை அதிகாலை கல்முனை மாநகரில் இடம் பெற்றுள்ளது.

கல்முனை மாநகர பஸ் தரிப்பு நிலையத்துக்குப் பின்னால் உள்ள வயல் வீதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

பஸ் நிலையத்தில் வழமையாக யாசகம் எடுக்கும் அவர் இன்று அதிகாலை அந்த வீதியால் செல்லும் பொழுது யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

கல்முனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பலியானவர் 70 வயதுடைய செல்லையா வேலாயுதம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் சேனைக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் 4 ஆம் காலனியில் திருமணம் முடித்து பெரிய நீலாவணையில் வசிப்பவர் என்றும் தெரியவந்துள்ளது.

இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் ஒரு மகன் இருக்கிறார்கள் .

கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

# கலைஞர் ஓய்வூதியம் வழங்கி வைப்பு



(எம். எப். நவாஸ்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் மாதாந்தம் வழங்கப்பட்டுவரும் கலைஞர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த ஏ .அகமது லெவ்வை என்ற கலைஞர் தெரிவு செய்யப்பட்டார்.

கிழக்கு மாகாணத்தின் மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளருக்கு இது தொடர்பில் உத்தியோபூர்வ கடிதத்தை அனுப்பி வைத்தார்.

இவருக்கான கடிதம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரால் வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும்: சிங்கப்பூர் தொழிலதிபர்களுக்கு மோடி அழைப்பு



இந்தியாவில் அதிக வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள விமானப் போக்குவரத்து, உள்கட்டமைப்பு போன்ற துறையில் முதலீடு செய்ய முன் வரவேண்டும் என சிங்கப்பூர் பெரும் தொழிலதிபர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

சிங்கப்பூரில் முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயலதிகாரிகளை சந்தித்து பிரதமர் மோடி உரையாடினார்.

சிங்கப்பூர் சவரின் வெல்த் பண்ட் டெமாசெக் ஹோல்டிங்ஸ் அண்ட் ஜி.ஐ.சி, டி.பி.எஸ். குழுமம், சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், ரெனிவபிள்ஸ் பிளேயர் செம்ப்கார்ப், சாங்கி ஏர்போர்ட், சிங்டெல், எஸ்.ஜி.சி, கேப்பிட்டல் லேண்ட் இன்வெஸ்ட்மென்ட் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட, இந்த கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"எனது மூன்றாவது பதவிக்காலத்தில் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால், அதன் வளர்ச்சியும், வேகமும் மேலும் அதிகரிக்கும். இதனால், ரயில்வே, சாலைகள், துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து, தொழில் பூங்காக்கள், டிஜிட்டல் இணைப்பு ஆகியவற்றில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இதனை சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் திறமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா வியக்கத்தக்க அளவில் முன்னேற்றங்களை அடைந்துள்ளது. அரசியல் ஸ்திரத்தன்மை, கொள்கை முன்கணிப்பு, வணிகம் செய்வதை எளிமையாக்குவதற்கான சீர்திருத்தங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. திறமையான பணியாளர் குழு, விரிவான சந்தை வாய்ப்பு, உலக பொருளாதார வளர்ச்சிக்கு 17 சதவீத பங்களிப்பை வழங்கும் இந்தியாவில் முதலீடு செய்வது என்பது எதிர்கால முன்னேற்றத்துக்கான அடிப்படை. விமான சந்தையில் பரந்து விரிந்த வானத்தைப் போல் ஏராளமான முதலீட்டு வாய்ப்புகள் குவிந்து கிடக்கின்றன.

சாதாரண "ஸ்கிராப்பிங்" தொழில் கூட பெரிய முதலீட்டுக்கான வாய்ப்புகளை அளிக்கிறது. குறிப்பாக, பழைய அரசு வாகனங்கள் அனைத்தையும் அழிக்க திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் உள்ள தொழிலதிபர்களுக்கு முதலீட்டு நடவடிக்கைகளை இலகுவாக்க ஏதுவாக இன்வெஸ்ட் இந்தியா அலுவலகம் இங்கு திறக்கப்படும்."– என்றார்.



# அமைதியை பாதுகாக்க முப்படைகளும் தயார் நிலையில் இருப்பது அவசியம்

## ராஜ்நாத் சிங் தெரிவிப்பு

நாட்டின் அமைதியை பாதுகாக்க முப்படைகளும் தயாராக இருக்க வேண்டியது அவசியம் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நடைபெற்ற கூட்டு தளபதிகள் மாநாட்டில் உரையாற்றிய ராஜ்நாத் சிங், ஆயுதப் படைகள் போருக்கு தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார்.

இது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு ராஜ்நாத் சிங் பதில் அளிக்கையில்,

"இந்தியாவின் அமைதி எந்தச் சூழ்நிலையிலும் சீர்குலைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காகவே, ஆயுதப் படைகள் போருக்குத் தயாராக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். அமைதியை பேணுவது மிகவும் முக்கியமானது. அமைதியை பாதுகாக்க இராணுவம் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

"உலகம் ஒரே குடும்பம்" என்பது இந்தியாவின் நீண்டகால தத்துவம். இந்தியா அமைதிக்காக வாதிடும் அதே வேளையில், உள்நாட்டிலும் உலக அளவிலும் அமைதியை நிலைநாட்ட மோதலுக்கு தயாராக இருக்க வேண்டும். சர்வதேச விவகாரங்களை கருத்தில் கொண்டே, இராணுவத்தின் தயார்நிலை குறித்து வலியுறுத்தப்பட்டது." – என்றார்.

# உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாரென விளாடிமிர் புடின் அறிவிப்பு



உக்ரைனுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் தொடங்கியது.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா இருந்து வருவதால் இந்த போர் மூன்று ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடிவுக்கு வரவில்லை.

இதனால், சர்வதேச அளவிலும் பல்வேறு பொருளாதார நெருக்கடி நிலவி வருகின்ற நிலையில் ரஷ்யா மற்றும் உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று பல்வேறு நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், உக்ரைனுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று புடின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக புடின் மேலும் தெரிவிக்கையில்,

"இந்தியா, சீனா மற்றும் பிரேசில் போன்ற நம்பிக்கைக்கு உரிய நட்பு நாடுகளுக்கு ரஷ்யா மதிப்பளிக்கிறது.

உக்ரைன் போர் தொடர்பாக இந்த நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டுள்ளேன்.

பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உக்ரைன் விரும்பினால் நான் தயாராக இருக்கிறேன்.

இதற்கு, இந்தியா, சீனா மற்றும் பிரேசில் நாடுகள் மத்தியஸ்தம் செய்ய வேண்டும்." – என்றார்.

# 650 ஏவுகணைகளை உக்ரைனுக்கு அனுப்புகின்றது பிரித்தானியா











ரஷ்ய – உக்ரைன் போரில் உக்ரைனுக்கான ஆதரவை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்டு பிரித்தானியா 650 ஏவுகணைகள் கொண்ட ஒரு தொகுப்பை அனுப்பவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை, பிரித்தானிய உள்துறை செயலாளர் ஜான் ஹீலி, ஜேர்மனியில் நடைபெறவுள்ள உச்சிமாநாடு ஒன்றில் அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு பிரித்தானியாவால் இந்த உதவியானது, உக்ரைனின் விமானப்படைக்கு பாதுகாப்பை மேம்படுத்துவதோடு, பிரதமர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கியின் நாட்டிற்கு புதிய பிரித்தானிய அரசின் ஆதரவை உறுதிப்படுத்தும் என்றும் ஜான் ஹீலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனின் மக்கள், உட்கட்டமைப்பு மற்றும் நிலங்களை ரஷ்ய தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க, பிரித்தானியா தயாரித்த இந்த ஏவுகணைகள் உதவும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், உக்ரைனின் பாதுகாப்புகளை மேம்படுத்தவும், ஐரோப்பியாவின் பாதுகாப்புக்கு உக்ரைனின் முக்கியத்துவத்தை வலியுறுத்த குறித்த பங்களிப்பு உதவியாக இருக்கும் என்றும் பிரித்தானிய உள்துறை செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் படி, உக்ரைன் பாதுகாப்பு தொடர்பு குழு நாட்டு பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்து கொள்ளும் உச்சிமாநாடு ஜேர்மனியில் உள்ள ராம்ஸ்டைன் நகரில் அமெரிக்க விமானப்படை தளத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 09

கனடா முரசு

சனிக்கிழமை 07/09/2024

## போதை மாத்திரைகள் பெரும் அளவில் மீட்பு

கனடாவின் தென் ஒன்றாரியோ கெனோரா பகுதியில் பாரியளவு போதைப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் போதை பொருள்களுடன் பிரம்டனைச் சேர்ந்த 20 மற்றும் 23 வயதுடைய 02



# 80,840 றொக்கட் குண்டுகளை உக்ரைனுக்கு அனுப்பும் கனடா

**உக்ரைன் - ரஷ்யா போர் அடுத்த கட்டத்தை எட்டியுள்ள நிலையில், தற்போது பிரித்தானியாவை அடுத்து கனடாவும் உக்ரைனுக்கு றொக்கட் குண்டுகளை அனுப்ப முடிவு செய்துள்ளது.**

**கனடா தம்மிடம் உள்ள றொக்கட் குண்டுகளில் 80,840 எண்ணிக்கையை உக்ரைனுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளது. அத்துடன், ஏவுகணைகளில் பயன்படுத்தப்படும் 1300 ஆபத்தான கருவிகளையும் உக்ரைனுக்கு அனுப்ப உள்ளது.**

இந்தத் தகவலை கனேடிய பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேயர் நேற்று வெள்ளிக்கிழமை ஓர் அறிக்கையில் தெரிவித்தார். ஜூன் மாதம் 2,160 றொக்கட் குண்டுகளை கனடா உக்ரைனுக்கு அனுப்பியுள்ளது.

கனடா அனுப்பியுள்ள CRV7 றொக்கட் குண்டுகளானது உயிரியல் அல்லது அணு ஆயுதங்களை பொருத்தக் கூடியது என்றும், இந்தக் குண்டுகளால் டாங்கிகள், கட்டடங்கள் அல்லது இராணுவ வீரர்கள் மீதும் தாக்குதலை நடத்த முடியும் என்றே நிபுணர்கள் தரப்பு தெரிவித்துள்ளது.

அது மட்டுமின்றி, 64 Coyote கவச வாகனங்கள் உட்பட பல்வேறு ஆயுதங்களை கனடா ஏற்கனவே அனுப்பி வைத்துள்ளது. 2022 பெப்ரவரி மாதம் ரஷ்யா ஊடுருவலை முன்னெடுத்ததன் பின்னர் சுமார் 3.3 பில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இராணுவ உதவிகளை முன்னெடுக்க கனடா உறுதி அளித்திருந்தது.

ஓகஸ்டு 6 ஆம் திகதி ரஷ்யாவுக்குள் அதிரடியாக உக்ரைன் ஊடுருவலை முன்னெடுத்த பின்னர் ரஷ்யா அமைதிப் பேச்சுவார்த்தை குறித்து அடிக்கடி தங்கள் கருத்தைத் தெரிவித்து வருகிறது. மேலும், இரண்டாம் உலகப் போருக்கு பின்னர், ரஷ்யா எதிர்கொள்ளும் மிகப்பெரிய நெருக்கடி இது வென்றே கூறப்படுகிறது.





# அமெ. தேர்தலில் ரஷ்யத் தலையீடு கனடா வன்மையாகக் கண்டனம்!

அமெரிக்க தேர்தலில் தலையீடு செய்வதற்கு ரஷ்யா மேற்கொண்ட முயற்சிகளை கனடா கண்டித்துள்ளது.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யா தலையீடு செய்ய முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது என கனடா தெரிவித்துள்ளது.

போலியான தகவல்களை பிரசாரம் செய்து மக்களை திசை திருப்பும் முயற்சிகளில் ரஷ்யா ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் தலைமையிலான அரசாங்கம் ரஷ்யாவிற்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியதன் பின்னர் இவ்வாறு தேர்தலில் தலையீடு செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடிய பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லீபிலான்க், ரஷ்யாவின் நடவடிக்கைகளை கண்டித்துள்ளார்.

இந்த அரசியல் தலையீடு தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் ரஷ்யாவின் முயற்சி கண்டிக்கப்பட வேண்டியது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# வேலையற்றோர் விகிதம் கனடாவில் அதிகரிப்பு!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 07

கனடாவின் வேலையற்றோர் விகிதம் மீண்டும் அதிகரித்துள்ளது.

ஓகஸ்ட் மாதத்தில் வேலையற்றோர் விகிதம் 6.6 சதவீதமாக அதிகரித்தது.

கனடிய புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று இந்தத் தகவலை வெளியிட்டது.

இதன் மூலம் கனடாவின் வேலையற்றோர் விகிதம் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட 2020, 2021ஆம் ஆண்டுகளைத் தவிர்த்து ஏழு ஆண்டுகளில் இல்லாத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

ஜனவரி மாதம் 2023 முதல் கனடாவின் வேலையற்றோர் விகிதம் 1.6 சதவீதம் அதிகரித்துள்ளது.




## போதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெருந்தொகையான போதை மாத்திரைகள் இவர்களிடம் இருந்தன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவற்றின் சந்தை பெறுமதி சுமார் 4 லட்சம் டொலர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் போதை மாத்திரைகளை விற்பனை செய்யும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





# பரிஸ் பரா ஒலிம்பிக்ஸில் கனடாவுக்கு பதக்க மழை

ஒன்றாரியோ, செப்ரம்பர் 07
2024 பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் இதுவரை 2020 டோக்கியோ பரா ஒலிம்பிக்ஸ் போட்டியை விட அதிக பதக்கங்களை கனடா வென்றுள்ளது.

பரிஸ் பரா ஒலிம்பிக்ஸ் போட்டியில் ஒன்பதாவது நாளான நேற்று வெள்ளிக்கிழமை கனடா மொத்தம் இருபது மூன்று பதக்கங்களை கைப்பற்றியுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை (08) வரை பாராலிம்பிக்ஸ் போட்டி தொடரும் நிலையில் கனடா மேலும் பதக்கங்களை வெற்றி பெறும் சாத்தியக்கூறுகள் உள்ளன.



Kula Sellathurai



Ganesan Sugumar

# பிளாட்டினம் ஜூபிலி பதக்கம் கனடாவில் 2 தமிழர்களுக்கும்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 07
இரண்டாம் எலிசபெத்தின் ஆட்சியின் எழுபதாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், கனேடிய அரசாங்கம் தனது குடிமக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு பிளாட்டினம் ஜூபிலி பதக்கம் வழங்கி கௌரவித்துள்ளது. கனடா மற்றும் கனேடிய நாடுகளுக்கு பல சேவைகளை செய்தவர்களை கனேடிய அரசாங்கம் கௌரவத்திற்காக தேர்வு செய்துள்ளது.

அந்தப் பதக்கத்தை இரண்டு கனடியத் தமிழர்களும் பெற்றுள்ளனர்.

கணேசன் சுகுமார், குலா செல்லத்துரை ஆகிய கனடிய தமிழர்கள் இந்தப் பதக்கத்தை பெற்றனர்.

மொத்தம் 18 கனடியர்களுக்கு வழங்கப்பட்ட இந்த அங்கீகாரத்தில் இவர்கள் இருவரும் அடங்குகின்றனர்.

இந்த முடிசூட்டு பதக்கம் மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவை குறிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட கனடிய அரசின் கௌரவமாகும். கனடாவின் ஆளுநர் நாயகம் மேரி சிமன் இந்த அங்கீகாரத்தை ஆரம்பித்து வந்தார்.

கனடாவிற்கும், தமது மாகாணத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியவர்களை இந்த அங்கீகாரம் அடையாளப்படுத்துகிறது.




# பிரதமர் ட்ரூடோவின் லிபரல் கட்சியினருக்கு மொன்ரியல் இடைத் தேர்தலில் சோதனை!

கியூபெக், செப்ரம்பர் 07

மொன்ரியல் இடைத் தேர்தலில் பிரதமர் ட்ரூடோவின் லிபரல் கட்சியினர் மற்றொரு சவாலை எதிர்கொள்கின்றனர்.

லூசெல்-எமார்ட்-வெர்டுன் தொகுதியின் இடைத் தேர்தல் இந்த மாதம் 16ஆம் திகதி நடைபெறுகிறது

நீண்ட காலம் லிபரல் கட்சி பிரதிநிதித்துவப்படுத்திய இந்தத் தொகுதியை வெற்றிகொள்ள புதிய ஜனநாயகக் கட்சி, புளொக் கியூபெக் கட்சிகள் முயல்கின்றன.

இந்த இடைத்தேர்தலை ஜஸ்டின் ட்ரூடோ மீதான வாக்கெடுப்பாக வாக்காளர்கள் கருதுகின்றனர்.

அண்மையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிநிதித்துவப்படுத்திய டொரன்டோ சென்-போல்ஸ் தொகுதி இடைத் தேர்தலில் லிபரல் கட்சி தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

லூசெல்-எமார்ட்-வெர்டுன் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து முன்னாள் நீதியமைச்சர் டேவிட் லமாட்டி விலகிய நிலையில் இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.














# 15 வயது மாணவியை தீயிட்டு எரிக்க முயன்ற சக மாணவி!

சசகெச்சுவான், செப்ரம்பர் 07

சசக்கெட்டூன் உயர்நிலைப் பாடசாலையில் 15 வயது மாணவி தீ வைத்து எரிக்க முயன்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது.

எவன் ஹார்டி கல்லூரியில் வியாழக்கிழமை இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் குறிப்பிட்ட மாணவி பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

இவரை காப்பாற்ற முயன்ற ஆசிரியருக்கும் காயம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த மாணவியும், ஆசிரியையும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் மாணவியின் காயங்கள் ஆபத்தானவை என கூறப்படுகிறது.

சம்பவம் நிகழ்ந்த பாடசாலை வியாழன், வெள்ளிக்கிழமை மூடப்பட்டுள்ளது.

இதே பாடசாலையை சேர்ந்த 14 வயது மாணவி இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவருக்கு எதிராக கொலை முயற்சிக் குற்றச்சாட்டுப் பதிவாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் பாடசாலை சமூகத்தை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பள்ளிக்கூடத்திற்கு மிக அருகாமையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இருந்த காரணத்தினால் இந்த சம்பவத்தின் பாரதூர தன்மை குறைந்ததாகவும் சந்தேக நபரை கைது செய்ய முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதச் சதி தொடர்பில் கியூபெக்கில் கனடியர் கைது!

## நியூயோர்க்கில் யூத மக்களைக் கொல்லத் திட்டமாம்




ஒன்றாரியோ, செப்ரம்பர் 07

நியூயோர்க்கில் யூத மக்களைக் கொல்ல இஸ்லாமிய அரசு பயங்கரவாத சதித் திட்டம் தீட்டியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் கனடாவைச் சேர்ந்த ஒருவர் கியூபெக்கில் கைது செய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் நினைவுநாளான அக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்படும் என்று கூறப்படும் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானைச் சேர்ந்த ஷாசீப் ஜாடுன் என்றும் அழைக்கப்படும் 20 வயதான முஹம்மது ஷாசீப் கான் புதன்கிழமை கைது செய்யப்பட்டார் என அமெரிக்க நீதித்துறை தெரிவித்துள்ளது. .

கான் 'ஐஎஸ்ஐஎஸ் என்ற பெயரில், முடிந்தவரை பல யூதர்களை படுகொலை செய்யும்' குறிக்கோளைக் கொண்டிருந்தார் என்சக் கூறப்படுகிறது.

கனேடிய சட்ட அமலாக்கத்தின் 'விரைவான நடவடிக்கை' காரணமாக கான் கைது செய்யப்பட்டார் என அமெரிக்க சட்டமாஅதிபர் மெரிக் கார்லேண்ட் கூறியுள்ளார்.

புரூக்ளினில் உள்ள யூத மையத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் கான் 'தானியங்கி மற்றும் அரை தானியங்கி ஆயுதங்களை' பயன்படுத்த நினைத்தார் எனத் திணைக்களம் ஒரு செய்தி வெளியீட்டில் கூறுகிறது.




# துப்பாகிச் சூடு நடத்துவார் என மிரட்டல் விடுத்த பெண் கைது

ஒன்றாரியோ, செப்ரம்பர் 07

ஓஷாவாவில் உள்ள ஒரு பாட சாலையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் போவதாக ஸ்னாப் சாட்டில் மிரட்டல் விடுத்தார் என்று 18 வயது பெண் மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

றோயல் கனடியன் மவுண்டட் பொலிஸிடம் இருந்து தாங்கள் இடை மறித்த ஸ்னாப்சாட் இடுகையைப் பற்றிய தகவலைப் பெற்றதாக டர்ஹாம் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் விளைவாக, அதிகாரிகள் டர்ஹாம் கல்லூரிக்குச் சென்று சந் தேகத்திற்கு இடமின்றி ஒரு சந்தேக நபரைக் கைது செய்தனர்.

விட்பியில் உள்ள அவரது வீட்டில் ஒரு தேடுதல் ஆணையை செயல் படுத்தியதாகவும், அங்கு அவர்கள் 18 துப்பாக்கிகள், ஐந்து ஏர்சா:ப்ட் துப் பாக்கிகள் மற்றும் 1,000 க்கும் மேற் பட்ட தோட்டாக்களையும் கைப் பற்றி னர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, துப் பாக்கிகள் சட்டப்பூர்வமாக கைய கப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டன.

ஜுஸ்மின் பகலிவாகன் என்ற சந்தேகநபர் மீது அச்சுறுத்தல் விடுத் ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# வாடகை மோசடியில் பெருந்தொகை பணத்தை இழந்த சர்வதேச மாணவர்

## ஒன்றாரியோ மாகாணத்தின் கிட்சனர் பகுதியில் சம்பவம்

கனடாவின் ஒன்றாரியோ மாகா ணத்தின் கிட்சனர் பகுதி சர்வதேச பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வாடகை மோசடியில் சிக்கி பெருந் தொகைப் பணத்தை இழந்துள்ளார்.

கொனிஸ்டோகா கல்லூரியில் கற்கும் ஹார்ஷ் பட்டேல் என்ற சர் வதேச மாணவரான இவ்வாறு ஏமாற் றப்பட்டு பெருந்தொகை பணத்தை இழந்துள்ளார்.

வீடு ஒன்றே வாடகைக்கு இருப்ப தாக கூறி பணம் பெற்றுக் கொள் ளப்பட்ட போதும் அவ்வாறு வீடு வாடகைக்கு இல்லை எனத் தாம் பின்னர் அறிந்து கொண்டார் என அந்த மாணவர் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு அதிக எண்ணிக்கையி லான மாணவர்கள் ஏமாற்றப்படுகின் றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச மாணவர்கள் மற்றும் குடியேறிகள் இவ்வாறான மோசடிக ளில் இலக்கு வைக்கப்படுகின்றனர் என பாட்டேல் தெரிவிக்கின்றார்.

குடியிருப்பு ஒன்று வாடகைக்கு விடப்படுவதாக முகநூலில் விளம் பரம் செய்யப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.

கனடா முழுவதிலும் இணைய வழியிலான வாடகை மோசடிகள்




அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

கனடிய மோசடி தவிர்ப்பு நிலை யம் இந்த விடயத்தை தெரிவித்துள் ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் இவ்வா றான 51 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன எனத் தெரிவிக் கப்படுகிறது.

வாடகைக்கு விடுவதாக போலி யாக சிலர் விளம்பரம்செய்து மோச டியான முறையில் பணம் பெற்றுக் கொள்ளும் சம்பவங்கள் பதிவாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மோசடிகளில் சிக்காமல் இருப்பதற்கு வாய்மொழி மூலமான இனக்கப்பாடுகளுக்கு இணங்கக் கூடாது எனவும் ஆவண ரீதியான இணக்கப்பாடுகள், உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், விளம்பரம் செய்யப்படும் வீடு காலி யானதா, அது வாடகைக்கு விடப்ப டுகின்றதா என்பதை அறிந்து கொண் டதன் பின்னர் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.






# சீனாவிலிருந்து போலி நாணயக் குற்றிகளை இறக்குமதி செய்த கனடியருக்கு தண்டனை

கனடாவில் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கனடாவின் இரண்டு டொலர் நாணய குற்றிகளை ஒத்த சுமார் 26,302 போலி நாணயங்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்துள்ளார்.

இவ்வாறு பெருந்தொகை போலி நாணயங்களை இறக்குமதி செய்த நபருக்கு கணடிய நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

கனடிய வரலாற்றில் இது வரையில் இவ்வளவு பாரிய அளவு போலி நாணய குற்றிகள் வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் கனடிய போலி நாணயங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த ஜீன் பிரான்கொயிஸ் ஜெனிரியோக்ஸ் என்ற நபரே இவ்வாறு போலி நாணயங்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்துள்ளார்.



அந்த நபருக்கு 9 மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக இத்தகைய குற்றங்களுக்கு 14 வருடங்கள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த போலி நாணயங்களையும் அரசாங்கம் கையகப்படுத்தப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.


சட்டவிரோதமான முறையில் கஞ்சா போதை பொருள் வைத்திருந்த குற்றத்திற்காக மேலும் 30 நாள்கள் சிறை தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்கள் மற்றும் போலி நாணயம் தொடர்பில் தவறிழைத்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஏற்கனவே இந்த நபர் தண்டனை அனுபவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மோசடிகள், களவு ஆள் மாறாட்டம் உள்ளிட்ட பல்வேறு குற்ற செயல்களில் இவர் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே 3 தடவைகள் இவர் சிறை தண்டனை அனுபவித்துள்ளார்.







# 7 ஆண்டுகளாக எரிவாயு கட்டணங்களை கூடுதலாகவே செலுத்தி வந்த பெண்மணி

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் மிஸ்ஸஸாகா பகுதியில் வ வீடொன்றின் உரிமையாளரான பெண் ஒருவர் கடந்த ஏழு ஆண்டுகளாக கூடுதல் இயற்கை எரிவாயுக் கட்டணத்தைச் செலுத்தி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனது அயலவர்களுக்கான கட்டணத்துடன் ஒப்பீடு செய்யும் போது தமது கட்டணம் கூடுதலாக அறவீடு செய்யப்பட்டதாக அவர் தெரிவிக்கின்றார்.

கடந்த ஏழு ஆண்டுகளாக இவ்வாறு குறித்த நிறுவனம் தன்னிடமிருந்து கூடுதல் தொகை அறவீடு செய்துள்ளது என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

இது நியாயமற்ற செயல் எனவும், கூடுதலாக அறவீடு செய்யப்பட்ட கட்டணம் மீள செலுத்தப்பட வேண்டும் எனவும் பொட்ரி சோய் என்ற அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

அயலவர்களின் வீடுகளில் கட்டணம் 20 டொலர்களாகக் காணப்பட்ட போது தமக்கான கட்டணம் சுமார் 77 டொலர்களாக அறவீடு செய்யப்பட்டு வந்தது என அவர் தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தபோது வீட்டு பாவனைக்கான எரிவாயுக் கட்டண பிரிவில் தமது வீட்டை இணைத்திருக்கவில்லை என்பதை அவர் கண்டறிந்துள்ளார்.

வர்த்தக பாவனைக் கட்டண அறவீட்டு முறையின் கீழ் அந்தப் பெண்ணிடம் கட்டணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

இதனால் கடந்த ஏழு ஆண்டுகளாகவே அவர் பெருந்தொகைப் பணத்தை கூடுதலாக செலுத்தியுள்ளார்.





# சக மாணவியைக் குத்திப் படுகொலை செய்த மாணவருக்கு ஆயுள் காலச் சிறைத்தண்டனை

கனடாவில் சக மாணவி ஒருவரை படுகொலை செய்த மாணவர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

லிடுக்கில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் கடந்த 2021 ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

17 வயதான ஜெனிபர் வின்க்ளியர் என்ற சிறுமி படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த படுகொலை சம்பவத்திற்கு தண்டனையாக ஆயுள் தண்டனையை நீதிமன்றம் விதித்துள்ளதுடன் 12 ஆண்டுகள் வரையில் பரோலில் செல்ல அனுமதி இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது 22 வயதான டய்லான்ட் பவுண்ட்டி என்ற நபருக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்ட் தி கிங் என்ற உயர்நிலைப் பள்ளியில் சமூக கல்வி பாட இடைவேளையின் போது இந்த நபர் மாணவியைக் கத்தியால் குத்தி தாக்கிக் கொன்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து இடங்களில் கத்தியால் குத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. கழுத்து உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வெட்டு காயங்கள் காணப்பட்டன என சட்ட வைத் திய அதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

ஜெனியின் குடும்பத்தினருக்கு ஏற்பட்ட பெருந்துயரத்திற்கு மன்னிப்பு கோருகிறார் எனவும் பவுண்டி தெரிவித்துள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பவுண்டி சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் 60 ஆண்டுகளுக்குப் பின்னர் ரேபிஸ் நோய் ஒருவருக்குக் கண்டுபிடிப்பு

## மருத்துவ உலகில் பெரும் பரபரப்பு

கனேடிய மாகாணமொன்றில், சுமார் 60 ஆண்டுகளுக்குப் பிறகு - அதாவது 1967 இற்குப் பின்னர் - முதன்முறையாக மனிதர்களில் பயங்கர நோயான ரேபிஸ் (மனித வெறிநாய்க்கடி நோய்) கண்டுபிடிக்கப்பட்டுள்ள விடயம், மருத்துவ உலகைப் பரபரப்படையச் செய்துள்ளது.

கனடாவின் ஒன்ராறியோ மாகாணத்தில் ஒருவர் ரேபிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். வெளவால் ஒன்றிடமிருந்து அவருக்கு அந்நோய் பரவிருக்கலாம் என நம்பப்படுகிறது.

Brantford-Brant இல் வசிப்பவர் தற்போது வைரஸால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிராண்ட் கவுண்டி சுகாதார பிரிவு வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது. சட்பரிக்கு வடக்கே உள்ள டிமிஸ்காமிங் பிராந்தியத்தில் உள்ள கோவாண்டா பகுதியில் வெளவால் ஒன்றின் தொடர்பால் இது ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக அந்தப் பிரிவு மேலும் கூறியது.

ஒன்ராறியோவிற்கான தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் கீரன் மூர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், ஒன்ராறியோவில் உள்ள வெளவால்களுடன் “நேரடியாக தொடர்பு கொண்ட பிறகு” அந்த நபர் பாதிக்கப்பட்டுள்ளார் என்ச் அதிகாரிகள் நம்புகின்றார் என்ச்ஜ் கூறினார். தனியுரிமையைப் பாதுகாக்கும் வகையில் அந்த நபரைப் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியிடப்படாது என்றார் அவர்.

ஒருவருக்கு ரேபிஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, யாராவது ரேபிஸ் வைரஸை தன் உடலில் சுமக்கக்கூடிய எந்த விலங்கையாவது தொட்டிருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகுமாறு சுகாதார அலுவலர்கள் மக்களைக் அறிவுறுத்தியுள்ளார்கள்.

ரேபிஸ் வைரஸை தன் உடலில் சுமக்கக்கூடிய விலங்குகளின் எச்சில் போன்றவை மனிதர்கள் மேல் படும் போது, அதிலிருந்து ரேபிஸ் வைரஸ் மனிதர்களுக்கு பரவும்.

மூளையையும் தண்டுவடத்தையும் இந்த ரேபிஸ் வைரஸ் பாதிக்கும். என்றாலும், உரிய நேரத்தில் முறையான சிகிச்சையளித்தால் இந்த ரேபிஸ் வைரஸ் தொற்றை கிட்டத்தட்ட 100 சதவிகிதம் குணமாக்கிவிட முடியும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

ஒரு நல்ல செய்தி என்னவென்றால், இந்த ரேபிஸ் தொற்று ஒரு மனிதரிடமிருந்து மற்றொரு மனிதருக்கு பரவியதாக இதுவரை ஆவணப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

